# தர்மத்தை சூதுகவ்வும் ஈற்றில் தர்மமே வெல்லும்.

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)

பெரியோர்களும் அறிஞர்களும் கூறும் ஒரு கூற்று இந்த அரசியல் குழப்பத்தில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்கூற்று **"எல்லாம் நன்மைக்கே"** என்பதாகும்.

நல்லவிதமாக ஒரு அரசாங்கம் சனநாயகத்தை கடைபிடித்தும் சட்ட ஆட்சியை நிலைபெறச்செய்தும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றும் சகலவித சுதந்திரங்களையும் மக்கள் அனுபவிக்கவிட்டும் மக்களின் நலன் கருதி செயற்பட்டு வந்த தேசிய அரசாங்கத்தை திடீரென இக்கட்டான நிலைக்குள் தள்ளி விடப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக செயற்பட்டவர் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ஆவார்.
அரசியல் செய்பவர்களை பிரதானமாக இரு சாரார்களாக பிரித்தும் வகுத்தும் கொள்ளலாம். மக்கள் நலம் சார்ந்த போக்குக்கொண்ட அரசியல்வாதிகள் ஒரு சாரார் எனவும் மற்றப் பகுதியினரை சந்தர்ப்பவாத அரசியல் செய்யும் பகுதியினர் எனவும் இனம் கண்டு கொள்ளலாம். மக்களின் நலன் சார்ந்தவர்களுக்கு ஒரு கொள்கை இருக்கும். அக் கொள்கையிலிருந்து தடம்புரளமாட்டார்கள். ஆகையால் அவர்கள் கட்சித் தாவல்களை மேற்கொள்ளமாட்டார்கள். அரசியல் சந்தர்ப்பவாதிகள் என்போர் சில சமயங்களில் தங்களை நல்லவர்களாக வெளிக்காட்டினாலும் அது தற்காலிகமாக வெளிப்படுத்திக் காட்டுகின்ற ஒரு போலிப் பாத்திரமாகவே கருதவேண்டியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியலோடு 2005ம் ஆண்டு ஆரம்பித்து 2014ம் ஆண்டு வரை பயணித்த மைத்திரிபால சிறிசேனாவை சனாதிபதி பீடத்திற்கு இட்டுச்சென்றவர் மாதுளுவேவ ஷோபித தேரர் என்ற ஒரு அறிவியல் ஞானி ஆவார். மஹிந்த ராஜபக்ஷாவினதும் அவரது கட்சியினரதும் அதிகார துஸ்பிரயோகங்கள் ஊழல்கள் வீண் விரயங்கள் சர்வாதிகார குடும்ப ஆட்சி போன்றவற்றை தகர்த்தெறிவதற்காகவும் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தவுமே மைத்திரிபால சிறிசேனா ராஜபக்ஷாவினரிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஐ.தே.அணியில் உள்வாங்கப்பட்டு நடைபெற்ற தேர்தலில் சனாதிபதியாக்கப்பட்டார்.

அவருக்கு கிடைத்த வாக்குளில் முக்கால்வாசிப் பங்கும் ஐ.தே.கட்சிக்கென உள்ள வாக்காளர்களின் வாக்குகளாகும். மைத்திரிபால சிறிசேனா கேட்டிரா விட்டிருந்தாலும் இந்த வாக்காளர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களித்திருந்திருப்பார்கள். இவை ஐ.தே.கட்சியின் கொள்கைக்கான வாக்குகள். மஹிந்த ராஜபக்ஷவை வெல்லுவதற்கான மேலதிக வாக்குகள் வடகிழக்கு தமிழர்களினதும் மலையகத் தமிழர்களினதும் தமிழ் பேசும் முஸ்லிம்களினதும்

வாக்குகளும் சிறிசேனாவுக்கிருந்த அவரது தொகுதியான பொலன்நறுவை மாவட்டத்திலிருந்து கிடைத்த வாக்குகளுமேயாகும். ஆனால் இந்த மனிதர் தனக்கு தான் 62 இலட்சம் வாக்குகளும் கிடைத்ததென்ற தொனியில் கூறிவருவது உத்தியோக பூர்வமாகவிருந்தாலும் உண்மையில் அவருக்கென தனிப்பட்ட வகையில் கிடைத்த வாக்குகள் ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்ததாகவே இருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷாவுக்கு கிடைத்த 57 இலட்சம் வாக்குகளும் சுதந்திரக்கட்சிக்கு உள்ளதும் மஹிந்த ராஜபக்ஷவின் புலிக்கெதிரான செயற்பாட்டினால் அவருக்கு கிடைத்த தனிச்செல்வாக்கு வாக்குகளாகவும் கணிக்கப்பட வேண்டும். ஆகையால் சுதந்திரக்கட்சியின் வாக்குகள் சனாதிபதி தேர்தலின் போது சிறிசேனாவுக்கு கிடைத்திருக்க வாய்ப்பில்லை. ஐ.தே.கட்சியின் பெரும்பாலான வாக்குகளால் வெற்றியடைந்து சனாதிபதியாகிய இவர் அந்தப் பதவியையே பாவித்து அந்தக் கட்சியை தோற்கடிக்க முயலுவது ஒரு நம்பிக்கைத் துரோகமான செயலாகவே கருதப்பட வேண்டும்.

இந்த நம்பிக்கைத் துரோகமான செயலையும் நடைபெறும் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் ஒரு நன்மையான செயலாகவே தற்போது கருத வேண்டியுள்ளது. மைத்திரிபால சிறிசேனா ஒரு உண்மையான சந்தர்ப்பவாதி என்பதையும் அவர் விரித்த வலையில் அவரே அகப்பட்டுக் கொண்டுள்ளார். இது ஒரு நன்மையான விடயமே. கட்சித்தாவல்களினால் பெரும்பான்மைப் பலத்தை பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில் நடத்தப்பட்ட இந்த அரசியல் நாடகம் அவர்களின் எதிர்பார்ப்பைப் பொய்ப்பித்து விட்டது. அவரைப் போன்று சந்தர்ப்பவாத அரசியல் செய்வோர் சிலரை தம் அணிக்குள் இழுத்துக்கொள்ள முடிந்தாலும் தேவையான எண்ணிக்கையினை பெற முடியாது போய்விட்டது. இன்று கொள்கையில் இறுக்கமாகவுள்ள முஸ்லிம் காங்கிரசும் மக்கள் காங்கிரசும் ஜே.வி.பியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் தங்களது கட்சிப் பிரதிநிதிகளை சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவிடாதுள்ளார்கள். இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து புளொட் அங்கத்தவரான வியாழேந்திரன் மஹிந்த ராஜபக்ஷா அணிக்கு கட்சித் தாவியதும் அதேசமயம் மஹிந்த ராஜபக்ஷா அணியில் பிரதி அமைச்சராக அண்மையில் பதவியேற்ற மனுஷ நாணயக்கார என்பவர் தனது பதவியைத் துறந்து ஐ.தே.கட்சியுடன் ஐக்கியமாகி விட்டார். இவரைப் பின்பற்றி வேறு சில மஹிந்த அதிருப்தியாளர்கள் வெளியேறக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதில் முன்னாள் சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஐ.தே.கட்சியுடன் சேரக்கூடிய ஒருவராக கணிக்கப்படுகிறார். இவர் பலவந்தமாக அமைச்சராக ஆக்கப்பட்டிருந்தார் என்பதும் அமைச்சராகிய கையுடன் அவர் வெளிநாடு ஒன்றிற்கு பறந்து விட்டாரெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அக்கட்சியின் அதிருப்தியாளரான இவருடன் வேறு சிலரும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆலோசனையுடன் ஐ.தே.கட்சி அணியினருடன் இணையக்கூடும் என்ற தகவலும் அத்தோடு ஜே.வி.பியையும் தமிழத் தேசிய கூட்டமைப்பையும் இணைத்து மீண்டும் ஒரு தேசிய அரசு உருவாகக் கூடும் என்ற தகவலும்

வெளியாகியுள்ளது. இதனால் ரணிலா ? மஹிந்த ராஜபக்ஷாவா ? பிரதமராகுவது என்பதைவிட சனநாயகமா? அல்லது சர்வாதிகாரமா? உருவாகப்படப் போகிறது என்பதில் சனநாயகமே வெற்றிகொள்ள வாய்ப்புள்ளது என்பது கூடியளவில் உறுதியாக்கப்பட்டுள்ளது.

சனநாயகத்தை சூதுகவ்வினாலும் மீண்டும் சனநாயகமே வெல்லும் என்பதை இந்த அரசியல் குளறுபடி புரியவைக்கிறது.

மைத்திரிபால சிறிசேன தான் வெளியிட்ட கூற்றின் படி ரணிலுக்கு பெரும்பான்மை கிடைத்தால் தனது சனாதிபதி பதவியை துறக்க முன்வருவாராயின் சனாதிபதிப் பதவியை ரணில் விக்ரமசிங்கவுக்கு தானாகவே கையளித்ததுச் சென்ற நிலைமையாக இருக்கும். 'கெடுவார் கேடு நினைப்பவர்' என்பது இந்த நாடகத்தின் முடிவாக கூறப்படும் பழமொழியாக அமையும்.

இந்த அரசியல் நாடகத்தில் விலைபோன சந்தர்ப்பவாதிகளாக ஐ.தே.கட்சியில் அறுவரும் மயைகத் தொண்டமானும் வடிவேல் சுரேசும் வடபுலத்தில் டக்லஸ் தேவானந்தாவும் கிழக்கில் ஒட்டுக்குழுவைச் சேர்ந்த வியாழேந்திரனும் இனம் காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள். சில நாட்கள் அமைச்சர்களாக திருப்தியடையட்டும். பேராசை பெருந்தரித்திரமாகப் போகின்றது.

ஆனால் இன்னுமொரு விதமாகவும் அரசியல் நகர்வு ஏற்படலாம் எனவும் ஒரு கணக்கு போடப்படுகின்றது. அதாவது மெல்ல மெல்ல 19ம். திருத்தச் சட்டத்தால் சுயாதீனமான செயற்பாடுகளாக்கப்பட்ட நிறுவனங்கள் சனாதிபதியின் அதிகாரத்திற்கு கீழே செயற்படச் செய்து ஒரு சர்வாதிகாரமான அரசை கொண்டு நடாத்துவது ஆகும். இந்த அரசு சனநாயக ரீதியில் செயற்படாது தான்தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்து செயலாற்ற முனையலாம். இந்த நிலைமை உருவாக்கப்பட்டால் சரத் பொன்சேகா மட்டுமல்லாமல் ரணிலையும் கூட கம்பிக்குள்ளே தள்ளிவிடும் சூழல் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த நகர்வு ஒரே தருணத்தில் இரண்டு மாங்காயை வீழ்த்தும் செயலாக அமைந்துவிடும். ஒன்று தேசிய அரசு முன்னெடுத்த புதிய அரசியலமைப்பை இதில் அதிகாரப் பகிர்வு முக்கியமாக இடம்பெறுகின்றது என்பதால் அது தொடரப்படாது தடுக்கப்பட்டு நிறுத்துவது. ( முதலமைச்சர் உட்பட த.தே.கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகள் தயைங்கத்தை மட்டும் வைத்து அதிரப்பகிர்வு இல்லை என்கின்றனர்.) இரண்டாவதானது மஹிந்தாவின் முன்னைய அரசில் இருந்த பல அரசியல் பேர்வழிகளினால் செய்யப்பட்ட குற்றங்கள் யாவும் மறைக்கப்பட்டு அவர்களை நிரபராதிகளாக்குவது. இது நடைபெற்றால் இலங்கை படுபாதாள பள்ளத்தில் தள்ளப்பட்ட நிலைமையை தோற்றுவிக்கும்.